# நடபடிகளில் மனமாற்றங்களும் மனமாற்றமில்லாமைகளும்

*நடபடிகளில் மனமாற்றத்திற்கான பல உதாரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் நூற்றாண்டுப் பிரசங்கியார்களின் பிரசங்கங்கள் மற்றும் சுவிசேஷத்தைக் கேட்டவர்களில் பலரின் உடனடியான பதில்செயல்கள் ஆகியவற்றினால் நமது இருதயங்கள் சிலிர்ப்படைகின்றன. மற்றவர்கள் தங்களின் இரட்சிப்பில் அகமகிழ்வதை நாம் காணும் பொழுது நாமும் அகம் மகிழுகின்றோம். இருப்பினும் சில வேளைகளில் அதே மனிதர்கள் பிரசங்கித்து, அதன் விளைவுகளில் உள்ள குறைபாடுகளின் காரணமாய் உற்சாகம் இழந்து போவதையும் நாம் வாசிக்கின்றோம். சில வேளைகளில், (சுவிசேஷத்தைக்) கேட்டவர்கள் மனமாற்றமின்றி சென்று விட்டார்கள். மனம் மாறியவர்கள் மற்றும் மனம் மாறாதவர்கள் ஆகியோருக்கிடையில் இருந்த வேறுபாடு என்ன? இவ்வேளையில் இதுவே நமது பாடமாகும்.*

## மனமாற்றத்தின் கூறுகள்

*மனமாற்றத்தின் மீதான, இரட்சிப்பின் திட்டத்தின் மீதான புதிய ஏற்பாட்டின் தெளிவான போதனையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தத் திட்டமானது பல கூறுகளைக் கொண்டதாயிருக்கலாம், மற்றும் இந்தக் கூறுகள் மனிதரைத் தேவனிடத்தில் மறுபடியும் சேர்க்கும் சங்கிலியின் கணுக்களாக ஒன்றிணைகின்றன. இப்பாடத்தில் நாம், நம்மை இரட்சிப்பதற்குக் கூறப்பட்டுள்ள விபரங்களைக் கவனிப்போம். இவைகள் மூன்று தலைப்புகளின் கீழ் வருகின்றன.*

**பரலோகத்தின் பங்கு**

*1. தேவன் (2 தீமோ. 1:8, 9). தேவனே இரட்சிப்பின் தொடக்கத் திட்ட வரைவாளராகவும், வடிவமைப்பவராகவும் உள்ளதால், அவரே இரட்சிக்கின்றார் என்று கூறப்படுகின்றது. அவரே சகல*

*ஆசீர்வாதங்களுக்கும் மூல ஆதாரமாக இருக்கின்றார். அவரே விரிவான திட்டத்தை வரைந்தார்; அவரே நமது இரட்சிப்பைத் திட்டமிட்டார்.*

*2. கிருபை (எபே. 2:5). இரட்சிப்பைக் கொடுப்பதற்கென்று தேவன் கடமைப்பட்டவரல்ல. தகுதியற்றவர்களுக்கும் கூட அவர் தமது ஈவுகளைப் பொழிகின்றார். இதுவே "கிருபை" என்ற வார்த்தையின் அர்த்தமாகும். இரட்சிக்கப்படுவதற்கு நாம் யோக்கியமானவர்கள் அல்ல.*

*3. கிறிஸ்து (மத். 1:21). தேவன் தம்முடைய குமாரனைக் கொடுத்ததில் (யோவா. 3:16) அவருடைய கிருபையானது எடுத்து விளக்கப்பட்டது. இயேசுகிறிஸ்துவே நமது இரட்சகராவார்.*

*4. கிறிஸ்துவின் இரத்தம் (மத். 26:28). கல்வாரிச் சிலுவையில் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தமானது பாவ நிவாரணமாயிருந்தது. இரத்தம் சிந்துதலின்றிப் பாவமன்னிப்பு இல்லை (எபி. 9:22).*

*5. பரிசுத்த ஆவியானவர் (1 கொரி. 6:11). கிறிஸ்து சென்ற பிறகு, பரிசுத்த ஆவியானவர் இவ்வுலகத்திற்கு அனுப்பப்பட்டார். இரட்சிப்பின் திட்டத்தை மனிதருக்கு வெளிப்படுத்துவதே அவரது செயலாய் இருந்தது. குறிப்பிட்ட சில மனிதர்கள் பேசும்படி அவர் ஏவுதல் செய்து அவர்களுக்கு வார்த்தையைக் கொடுத்தார் (அப். 2:4). ஆவியானவரால் வார்த்தையானது மனிதருக்கு ஒப்புவிக்கப்பட்டது.*

*6. தேவனுடைய வசனம் அல்லது சுவிசேஷம் (ரோமர் 1:16). சுவிசேஷத்தின் செய்தியில்தான் தேவனுடைய இரட்சிப்பின் வல்லமை இருக்கின்றது. அந்தச் செய்தியை விசுவாசிக்கும் ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படுவதற்கான வாய்ப்பைப் பெறுகின்றார்கள்.*

*இதுவரை குறிப்பிடப்பட்ட கூறுகள் யாவும் பரலோகத்திலிருந்து மனிதருக்குத் தரப்பட்டவைகள்/நீட்டிக்கப்பட்டவைகள் ஆகும். ஒரு சங்கிலியின் கண்ணி போல இவை ஒவ்வொன்றும் அவசியமானவைகளாகும். இரட்சிப்பு என்பது ஒரு வசனப் பகுதியில் அத்திட்டத்தின் ஒரு கூறாகவும், இன்னொரு வசனப் பகுதியில் மற்ற கூறாகவும் குறிப்பிடுவதால் இவைகள் முரண்பாடானவை என்று ஒருவரும் நினைத்து விடக் கூடாது.*

***மனிதர்கள் கருவியாகச் செயல்படுதல்***

*இரட்சிப்புக்கான திட்டத்தின் இரண்டாம் பிரிவை நாம் படிக்கையில், மனிதனை ஈடுபடுத்தும் சில கூறுகளை நாம் காணுகின்றோம். 2 கொரி. 4:7ன் படி சுவிசேஷமானது மண்பாண்டங்களில் வைக்கப்பட்டு கேட்பவர்களிடத்தில் எடுத்துச் செல்லப்படுகின்றது. (ரோமர் 11:13; 1 கொரி. 9:22ஐக் காணவும்.) சுவிசேஷமானது சுவிசேஷப் பிரசங்கத்தினாலும் போதனையினாலும் கொண்டு வரப்படுகின்றது. 1 கொரிந்தியர் 1:21, "எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி, உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று" என்று கூறுகின்றது.*

*பாவிகளின் பங்கு*

*ஒரு வகையில், பாவி தம்மையே இரட்சித்துக் கொள்ளுகின்றார் (அப். 2:40). எப்படி? அவர் கேள்விப்படும் போது விசுவாசித்து (மாற். 16:16; ரோமர் 10:17), மனந்திரும்பி (அப். 17:30, 31; 2 கொரி. 7:10), கிறிஸ்துவில் தாம் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு (ரோமர் 10:10), மற்றும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதினால் (1 பேது. 3:21).*

*மனிதர்கள் ''தங்களையே இரட்சித்துக் கொள்வதினாலும்'', மனிதர்களால் செய்யப்படும் செயற்கூறுகள் அவர்களை இரட்சிப்பதாலும், தேவன் கட்டளையிட்டுள்ளவைகளை மனிதர்கள் செய்கின்ற போது அவர்கள் இரட்சிக்கப்படுகின்றார்கள் என்ற கருத்து தொடர்கின்றது. இயேசுவே நமது இரட்சகர் என்பதை நாம் புரிந்து கொள்கின்றோம். இயேசு இரட்சிப்பதற்கு முன் இரட்சிப்பின் திட்டத்தினுடைய இப்படிகள் அவரது இரட்சிப்புடன் இணைந்து செல்லும் வகையில் மட்டுமே இரட்சிப்பை அளிக்க முடியும்.*

## மனமாற்றம் மற்றும் மனமாற்றமில்லாமையில் உள்ள வித்தியாசங்கள்

*நடபடிகளின் புத்தகத்தில் சுவிசேஷமானது பிரசங்கிக்கப்பட்ட பொழுது மனமாற்றம் அடைந்தவர்களுக்கும் மனமாற்றம் அடையாதவர்களுக்கும் இடையில் இருந்த வித்தியாசம் என்ன?*

*எத்தியோப்பிய மந்திரியைப் பற்றி அப். 8ல் கூறப்பட்டுள்ளவற்றை ஜாக்கிரதையாய்க் கவனிப்போம். தேவன் அவருக்குச் செய்தது என்ன? அவர் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்பினாரா? நிச்சயமாகவே அவ்வாறே விரும்பினார். கிறிஸ்து அவருக்காக மரித்தாரா? ஆம். பரிசுத்த ஆவியானவர் அவருக்கு ஏதேனும் செய்தாரா? ஆம், வரலாற்றைக் கூறும்படி ஒரு பிரசங்கியாரை அவர் ஏவியிருந்தார். சுவிசேஷமானது இம்மனிதருக்கானதாய் இருந்தது.*

*இப்பொழுது நாம் அப். 24ல் பேலிக்ஸின் விஷயத்தைக் கவனிப்போம். அவர் மனமாற்றப்படவில்லை. அவரைப் பற்றிய நமது கேள்விகளை நாம் கேட்போம். தேவன் அவருக்குச் செய்திருந்தது என்ன? தேவன் அவர் மீது அன்புகூர்ந்தாரா? ஆம். இயேசு அவருக்காக மரித்தாரா? நிச்சயமாக. ஏவப்பட்ட செய்தியைத் தேவன் அவருக்குக் கொடுத்தாரா? ஆம். தேவன் எத்தியோப்பிய மந்திரிக்குச் செய்த ஒவ்வொன்றையும் பேலிக்ஸுக்கும் செய்தார். தேவன் ஒருவருக்கு வாய்ப்பைக் கொடுத்து, இன்னொருவருக்கு வாய்ப்பைக் கொடுக்கத் தவறி விட்டார் என்பது இவ்விருவருக்கும் இடையில் உள்ள வித்தியாசம் அல்ல. இருவருக்குமே தேவன் ஒரே விதமானவைகளையே செய்திருந்தார்.*

*மேலும், ஒருவர் ஏற்றுக் கொள்ள முடிந்தது, இன்னொருவர் ஏற்றுக்கொள்ள முடியாமல் போயிற்று என்பதும் வேறுபாடல்ல. தேவன் தம்மிடத்தில் வருமாறு ஒவ்வொருவரையும் அழைக்கின்றார். பாவிகளில் சிலர் அதை ஏற்றுக் கொள்ளும் திறனற்று இருந்தால் சுவிசேஷ*

*அழைப்பானது கேலிக்குரியதாகிவிடும்.*

*மனிதர்கள் கருவியாகச் செயல்படுவதில் வித்தியாசம் இருந்ததா? எத்தியோப்பிய மந்திரிக்குப் பிலிப்பு சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததை நாம் கவனிக்கின்றோம் - ஆனால் அது போலவே பவுலும் பேலிக்ஸுக்குப் பிரசங்கித்தார். அதிலும் வேறுபாடு ஒன்றும் இருப்பதில்லை.*

*பிறகு என்னதான் வித்தியாசம்? பாவிகளால் தரப்பட்ட பதில்செயல் ஒன்றில் மட்டுமே வித்தியாசம் உள்ளது. ஒருவர் கீழ்ப்படிந்தார், இன்னொருவர் கீழ்ப்படியாதிருந்தார். ஒருவர் மனந்திரும்பி, தம் விசுவாசத்தை அறிக்கையிடுவதில் தைரியமாய் இருந்தார், இன்னொருவர் அப்படியில்லை. ஒருவர் தண்ணீருக்குள் இறங்கி ஞானஸ்நானம் பெறச் சித்தமாய் இருந்தார். இன்னொருவர் அப்படியில்லை.*

## *முடிவுரை*

*இப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்பட்டிராதிருந்தால், நம்மில் வேறு எவருக்கும் தேவன் செய்திருப்பதைப் போல் அதிகமாய் உங்களுக்குச் செய்திருக்கவில்லை என்று அர்த்தமாகாது. நீங்கள் இரட்சிக்கப்பட முடியாது என்றும் ஆகாது. மற்றவர்கள் உங்களுக்கு இரட்சிப்பின் செய்தியைக் கொண்டு வர மறுத்து விட்டார்கள் என்றும் அர்த்தமாகாது. உங்களுக்கு மனதில்லாத காரணத்தினால் மட்டுமே அப்படியாயிற்று (மத். 23:37).*